[1992 ஏப்ரல் 28

6. "இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா" முன்னாள் கட்டுரையாளர் கே. பி. சுனில், "முரசொலி" ஆசிரியர் மற்றும் "கோவை மாலை முரசு" ஆசிரியர் ஆகியோரை பேரவை கூடாதபோது கைது செய்தால் பேரவைத் தலைவர் முன் ஆஜராகச் செய்யும்மாறும் பேரவைக் கூடும்போது அவர்களைப் பேரவைமுன் பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று ஆஜராகச் செய்யுமாறும் பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்பு.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைய தினம் பேரவையின் அலுவல்கள் முடிவடைகின்ற போதிலும் பேரவையின் முடிவிற்கு இணங்க திருவாளர்கள் சுனில், இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி, முன்னாள் எழுத்தாளர் திரு. எஸ். செல்வம், ஆசிரியர், முரசொலி, திரு. சுந்தர், ஆசிரியர், கோவை மாலை முரசு ஆகியோரை கைது செய்து இந்தப் பேரவைக்கு அவர்களைக் கண்டிப்பதற்காக அழைத்து வரவேண்டும் என்று என்னால் பிறப்பிக்கப்பட்ட பிடி ஆணையின் படி பேரவைக் கூட்டம் இல்லாத நாளில் அவர்கள் கைது செய்யப்பட்டால் தொடர்ந்து பேரவை கூடும் நாளில் பேரவைமுன் ஆஜர்படுத்துவதற்கான ஆணையினைப் பெறுவதற்காக என்முன் ஆஜர்படுத்தப்பட வேண்டும் என்று காவல் துறையினருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மீண்டும் பேரவை கூடும் எந்த நாளில் அவர்களைப் பேரவைமுன் அழைத்து வரவேண்டுமென்பதற்குரிய கட்டளையை அப்போது நான் பிறப்பிப்பேன். அதற்கேற்றவாறு காவல் துறை அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. உரிமைப் பிரச்சினைகள். (தொடர்ச்சி)

(ஆ) உறுப்பினர் டாக்டர் தே. குமரதாஸ் 12—2—1992 ஆம் தேதிய "ஜூனியர் விகடன்" பத்திரிகையில் பேரவை நடவடிக்கைகளைத் திரித்து கருத்துக்கள் கூறியதாகக் கூறப்படுவது பற்றிய பிரச்சினை குறித்து.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: இந்தப் பேரவையை அவமதிக்கின்ற வகையிலேயும், அவருக்கு இருக்கின்ற உரிமையைமறுக்கிற வகையிலேயும், பேரவைத் தலைவருடைய நடவடிக்கைகளுக்கும் உள்நோக்கம் கற்பிக்கின்ற வகையிலேயும் ஒரு பத்திரிகையில் கருத்துக்கள் கூறியதைக் குறிப்பிட்டு பேரவை உறுப்பினர், டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவை உரிமை மீறல் பிரச்சினை எழுப்பியிருந்தார். அவர் இந்தப் பிரச்சினையை எழுப்பிய

உடனே பேரவை உறுப்பினர் என்கின்ற வகையில் அதற்கான விளக்கம் அளிக்க டாக்டர் குமாரதாஸ் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் அவர் அந்த அனுமதியை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளாது உரிமை மீறல் பிரச்சினைக்குத் தொடர்பு இல்லாத பல்வேறு பிரச்சினைகளைத் தொடர்ந்து வற்புறுத்த ஆரம்பித்ததன் விளைவாக ''உங்களுக்கு ஏதேனும் விளக்கம் அளிக்க விருப்பம் இருந்தால், எழுத்து மூலமாக எனக்கு அதை அளிக்கலாம்'' என்று நான் அப்போது ஆணை பிறப்பித்து இருந்தேன். அந்த ஆணை செயலாளர் மூலம் அவருக்கு அனுப்பப்பட்டு இருந்தும்கூட, இரண்டு முறை நினைவூட்டுக் கடிதங்களுக்குப் பின்னர்தான் அவருடைய பதிலுரையை எனக்கு எழுத்து மூலமாகத் தெரிவித்தார். எனவே ஓரளவுக்கு நாள் கழித்து எடுத்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர் எழுத்து மூலமாகக் கொடுத்த பதிலுரையிலும் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பிய நாளைக்கு பின்னர் நடந்த பல்வேறு அரசியல் சம்பவங்களை எல்லாம் அதன்மீது திணித்து, பல்வேறு உள்நோக்கங்களைக் கற்பிக்கின்ற வகையில் அவர்கள் தன்னுடைய பதில் உரையைக் கொடுத்திருக்கிறார்கள். எந்த வகையிலேயும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ''அவர் பேரவையின் உரிமையை மீறி இருக்கிறார்'' என்று எழுப்பிய பிரச்சினைக்கு நேரடியான பதில் அதில் இல்லாத காரணத்தினால், எந்த வகையிலும் அந்த விளக்கம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கில்லை என்று தெரிவித்து, பேரவை விதி 226-ன் கீழ் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் தன்னுடைய கட்டுரையில் எழுதிய சம்பவங்கள் எந்த அளவுக்குப் பேரவையின் அவை உரிமை மீறிய செயல் என்பதை ஆய்ந்து அதற்குரிய எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் பேரவைக்கு அறிக்கையாக அளிக்குமாறு உரிமைக் குழுவினைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த அறிக்கையை அளிக்குமாறு கேட்டுக்கொண்டு இப்பிரச்சினையை உரிமைக் குழுவுக்கு அனுப்பி வைக்கிறேன்.

(இ) பேரவைத் தலைவர் ஏற்கனவே தீர்ப்பளித்த பிரச்சினை பற்றி ''இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா'' ஏப்ரல் 24—மே 1 இதழில் அதன் ஆசிரியர் அனில்தர்க்கார் வெளியிட்டுள்ள செய்திகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, இல்லஸ்ட்ரேட்டட் பத்திரிகையின் ஆசிரியரான அனில் தர்க்கர் அவர்களைப் பெருந்தன்மையோடு நாம் இங்கே கூண்டிலே வந்து தண்டனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கின்ற தண்டனையைக் குறைத்து எச்சரிக்கையோடு விடுத்ததற்குப் பின்னரும் எந்தப் பிரச்சினைக்காக அவை உரிமைப் பிரச்சினை வந்ததோ, அதே பிரச்சினையை திரும்ப தன்னுடைய பத்திரிக்கையிலே எழுதி அவையை அவமதிக்கிற வகையிலேயும், அவைத் தலைவருடைய பெருந்தன்மையானஅந்த தண்டனையைக்